**DEPOSITION OF WITNESS**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO. I**
**DINDIGUL.**

**C.C.No. 15/2024**

**Prosecution Witness : 1**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **Name** | : மலர்விழி | | **Caste** | : | |
| **Husband's Name** | : கோவிந்தராஜ் | | **Calling** | : | கூலி வேலை |
| **Village** | : சீலப்பாடி | | **Religion** | : | |
| **Taluk** | : | | **Age** | : | **39** |
| | | | **Dated** | : | **23.06.2025** |

**23.06.2025**

இந்திய பிரமாண வகைமுறைச் சட்டம் 1969 (பிரிவு 4 ) – ன் படி சாட்சிக்கு சத்திய பிரமாணம் செய்யப்பட்டு பிரமாணத்தின் பேரில் சாட்சியின் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.

பட்டியல் சாட்சி–1 திரு. **மலர்விழி** ஆஜர். பிரமாணம் போதிக்கப்பட்டு அ.சா. ஆக முதல் விசாரணை செய்யப்பட்டார்.

**<u>எதிரி ஆஜர்</u>**

1. நான் திண்டுக்கல் **சீலப்பாடி** குடியிருந்து கூலி வேலை செய்து வருகிறேன்.இவ்வழக்கு சம்பத்தில் இறந்த கோவிந்தராஜ் எனது கணவர். கடந்த 25.07.2023ம் தேதி ராம்கி என்பவர் எனக்கு போன் செய்து முள்ளிப்பாடி பஸ் ஸ்டாப்பில் எனது கணவரும் ரம்கியும் நின்று பேசிக்கொண்டிருந்தபோது TVS 50 வாகனம் எனது கணவர் மீது மோதி விபத்து ஏற்படுத்தியதாகவும், இந்த சம்பவத்தில் எனது கணவருக்கு பின் தலையில் மற்றும் இடது கண்ணுக்கு அருகே காயம் பட்டதாகவும் தகவல் சொன்னார். தகவல் கேள்விப்பட்டு நான் திண்டுக்கல் மருத்துவமனை சென்று பார்த்தேன். அங்கு எனது கணவருக்கு சிகிச்சை அளிக்கப்பட்டது. அங்கு போலிசார் வந்து விசாரிக்க நான் நடந்ததை கூறி போலிசாரிடம் புகார் கொடுத்தேன். என்னிடம் காட்டப்படும் புகாரில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். (**புகார் அதசாஆ. 1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** )பின்னர் மேல் சிகிச்சைக்காக மதுரை ராஜஜி மருத்துவமனைக்கு அழைத்து சென்றோம். அங்கு எனது கணவர்

சிகிச்சை பலனின்றி இறந்து விட்டார். போலிசார் இவ்வழக்கு சம்பந்தமாக என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை–</u>**

எதிரி தரப்பில் வாய்ப்பு வழங்கப்பட்டு குறுக்குவிசாரணை இல்லை.

taken down by me in open court read over to the Witness in the presence of the accused interpreted to him Tamil and admitted by him to be correct.

PACKIARAJ Digitally signed by PACKIARAJ Date: 2025.07.23 18:50:39 +0530

Judicial Magistrate No.I
Dindigul.

**DEPOSITION OF WITNESS**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO. I**
**DINDIGUL.**

**C.C.No.15/2024**

**Prosecution Witness : 2**

| | | | |
|---|---|---|---|
| **Name** | : ராம்கி | **Caste** | : |
| **Father's Name** | : பரமசிவம் | **Calling** | : டிரைவர் |
| **Village** | : கொத்தம்பட்டி | **Religion** | : |
| **Taluk** | : | **Age** | : 35 |
| | | **Dated** | : 23.06.2025 |

**23.06.2025**

இந்திய பிரமாண வகைமுறைச் சட்டம் 1969 (பிரிவு 4 ) – ன் படி சாட்சிக்கு சத்திய பிரமாணம் செய்யப்பட்டு பிரமாணத்தின் பேரில் சாட்சியின் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.

பட்டியல் சாட்சி– 2 திரு. ராம்கி ஆஜர். பிரமாணம் போதிக்கப்பட்டு அ.சா.2 ஆக முதல் விசாரணை செய்யப்பட்டார்.

**எதிரி ஆஜர்**

1. நான் திண்டுக்கல் **கொத்தம்பட்டி** குடியிருந்து டிரைவர் வேலை செய்து வருகிறேன்.இவ்வழக்கு சம்பவத்தில் இறந்த கோவிந்தராஜ் தெரியும், கடந்த 25.07.2023ம் தேதி இரவு 07.15 மணியில் இருந்து 07.30 மணி இருக்கும், நானும் கோவிந்தராஜம் முள்ளிப்பாடி சின்ன காமலப்புரம் பிரிவில் இருந்து பேசிக்கொண்டிருந்தோம் அப்போது ஆஜர் எதிரி Hero Splender pro இருசக்கர வாகனத்தில் லைட் இல்லாமல் 4 நபர்களை ஏற்றிக்கொண்டு கிழக்கு இருந்து மேற்கு நோக்கி அதிவேகமாக வந்து கோவிந்தராஜ் மீது மோதிவிட்டார். கோவிந்தராஜ் க்கு பின் தலையில் பலத்த காயம் பட்டது. அங்கு இருந்தவர்கள் ஆம்புலன்ஸை வரவழைத்தார்கள் நான் கோவிந்தராஜ் மனைவி மலர்விழிக்கு தகவல் சொல்லிவிட்டு ஆம்புலன்ஸில் காயம்பட்ட கோவிந்தராஜ் திண்டுக்கல் மருத்துவமனைக்கு கொண்டு சேர்த்தேன். அங்கு கோவிந்தராஜ் க்கு சிகிச்சை அளிக்கப்பட்டது. பின்னர் அவரை மதுரை ராஜஜி மருத்துவமனைக்கு அழைத்து

சென்றார்கள் அங்கு அவர் சிகிச்சை பலனின்றி இறந்துவிட்டார்.போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

எதிரி தரப்பில் வாய்ப்பு வழங்கப்பட்டு குறுக்குவிசாரணை இல்லை.

taken down by me in open court read over to the Witness in the presence of the accused interpreted to him Tamil and admitted by him to be correct.

PACKIARAJ Digitally signed by PACKIARAJ Date: 2025.07.23 18:50:45 +0530

Judicial Magistrate No.I
Dindigul.

**DEPOSITION OF WITNESS**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO. I**
**DINDIGUL.**

**C.C.No.15/2024**

**Prosecution Witness : 3**

| | | | |
|---|---|---|---|
| **Name** | : ராஜகோபால் | **Caste** | : |
| **Father's Name** | : தியாகராஜன் | **Calling** | : சலுன் கடை |
| **Village** | : தாமரைப்பாடி | **Religion** | : |
| **Taluk** | : | **Age** | : 35 |
| | | **Dated** | : 23.06.2025 |

**23.06.2025**

இந்திய பிரமாண வகைமுறைச் சட்டம் 1969 (பிரிவு 4 ) – ன் படி சாட்சிக்கு சத்திய பிரமாணம் செய்யப்பட்டு பிரமாணத்தின் பேரில் சாட்சியின் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.

பட்டியல் சாட்சி– 3 திரு. **ராஜகோபால்** ஆஜர். பிரமாணம் போதிக்கப்பட்டு அ.சா. 3 ஆக முதல் விசாரணை செய்யப்பட்டார்.

**<u>எதிரி ஆஜர்</u>**

1. நான் திண்டுக்கல் **தாமரைப்பாடி** குடியிருந்து சலுன் கடை வைத்துள்ளேன். .இவ்வழக்கு சம்பவத்தில் இறந்த கோவிந்தராஜ் தெரியாது , இந்த வழக்குபற்றி எனக்கு எதுவும் தெரியாது.ஆஜர் எதிரியை தெரியாது. போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>அரசு தரப்பில் பிறழ் சாட்சியாக அனுமதி கோரப்பட்டு பிறழ் சாட்சியாக விசாரணை செய்ய அனுமதி அளிக்கப்படுகிறது.</u>**

கடந்த 25.07.2023ம் தேதி நான் எனது கடை அருகே இருந்தபோது இவ்வழக்கு சம்பவத்தில் இறந்த கோவிந்தராஜ் என்வரும், ராம்கி என்பவரும் முள்ளிப்பாடி காமலப்புரம் பிரிவு அருகே இரவு 7.30 மணிக்கு ரோட்டின் ஓரமாக பேசிக்கொண்டு இருந்தார்கள் என்றும், அப்போது ஆஜர் எதிரி அதே ரோட்டில் கிழக்கில் இருந்து மேற்கு நோக்கி TN 57 AL 6176 Hero Passion pro இருசக்கர வாகனத்தை அவரது மனைவி மற்றும்

குழந்தைகளை ஏற்றிக்கொண்டு அதிவேகமாகவும் அஜாக்கிரதையாகவும் வந்து கோவிந்தராஜ் மீது மோதி விபத்து ஏற்படுத்தி விட்டார் என்றும் இந்த சம்பவத்தில் கோவிந்தராஜ் க்கு பின் தலை இடது கண் அருகே பலத்த காயம் ஏற்பட்டது என்றும் எதிரியின் குழந்தைகளுக்கும் காயம்பட்டது என்றும் காயம் பட்டவர்களை திண்டுக்கல் அரசு மருத்துவமனைக்கு ஆம்புலன்ஸில் அனுப்பி வைத்தோம் என்றும் இந்த சம்பவத்தை நான் நேரில் பார்த்தேன் என்றும் போலிசார் விசாரணையில் கூறிவிட்டு தற்போது எதிரியை தெரியாது என்றும்,இவ்வழக்கு பற்றி எதுவும் தெரியாது என்றும் பிறழ் சாட்சி அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

எதிரி தரப்பில் வாய்ப்பு வழங்கப்பட்டு குறுக்குவிசாரணை இல்லை.

taken down by me in open court read over to the Witness in the presence of the accused interpreted to him Tamil and admitted by him to be correct.

PACKIARAJ Digitally signed by PACKIARAJ Date: 2025.07.23 18:50:52 +0530

Judicial Magistrate No.I
Dindigul.

**DEPOSITION OF WITNESS**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO. I**
**DINDIGUL.**

**C.C.No. 15/2024**

**Prosecution Witness : 4**

| | | | | |
|---|---|---|---|---|
| **Name** | : மணிகண்டன் | **Caste** | : | |
| **Father's Name** | : பாண்டியன் | **Calling** | : | காய்கறி வியாபாரம் |
| **Village** | : குடைப்பாறை பட்டி | **Religion** | : | |
| **Taluk** | : | **Age** | : | 27 |
| | | **Dated** | : | **23.06.2025** |

**23.06.2025**

இந்திய பிரமாண வகைமுறைச் சட்டம் 1969 (பிரிவு 4 ) – ன் படி சாட்சிக்கு சத்திய பிரமாணம் செய்யப்பட்டு பிரமாணத்தின் பேரில் சாட்சியின் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.

பட்டியல் சாட்சி–4 திரு. **மணிகண்டன்** ஆஜர். பிரமாணம் போதிக்கப்பட்டு அ.சா. 4 ஆக முதல் விசாரணை செய்யப்பட்டார்.

<u>எதிரி ஆஜர்</u>

1. நான் திண்டுக்கல் **குடைப்பாறை பட்டி** குடியிருந்து **காய்கறி வியாபாரம் செய்து** வருகிறேன்.இவ்வழக்கு சம்பவத்தில் இறந்த கோவிந்தராஜ் எனது மாமா கடந்த 25.07.2023ம் தேதி எனது அத்தை மலர்விழி எனக்கு போன் செய்து மாமாவிற்கு விபத்து நடந்ததாக தகவல் சொன்னார் தகவல் கேள்விப்பட்டு நான் திண்டுக்கல் அரசு மருத்துவமனை வந்து பார்த்தேன். சம்பவம் பற்றி ராம்கி என்பவரிடம் கேட்டபோது அன்றைய தினம் 7.30 மணிக்கு டீ சாப்பிட்டு விட்டு சின்ன காமலாப்புரம் பிரிவு அருகே Splender போல ஒரு வண்டி 4 நபர்களை ஏற்றிக்கொண்டு வேகமாக வந்து கோவிந்தராஜ் மீது மோதியதாக சொன்னார். பின்னர் போலிசார் திண்டுக்கல் அரசு மருத்துவமனை வந்து விசாரிக்க நடந்ததை ராம்கியிடம் கேட்டு நான் புகார் எழுதிக்கொடுத்தேன். என்னிடம் காட்டப்படும் புகாரில் உள்ள சாட்சி கையொப்பம் என்னுடையது தான். பின்னர் கோவிந்தராஜ் மேல் சிகிச்சைக்காக மதுரை ராஜஜி அரசு மருத்துவமனைக்கு அழைத்து சென்றோம். அங்கு 3 நாள்கள் கழித்து சிகிச்சை பலன்றி இறந்துவிட்டார்.

போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

எதிரி தரப்பில் வாய்ப்பு வழங்கப்பட்டு குறுக்குவிசாரணை இல்லை.

taken down by me in open court read over to the Witness in the presence of the accused interpreted to him Tamil and admitted by him to be correct.

PACKIARAJ Digitally signed by PACKIARAJ Date: 2025.07.23 18:50:58 +0530

Judicial Magistrate No.I
Dindigul.

**DEPOSITION OF WITNESS**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO. I**
**DINDIGUL.**

**C.C.No. 15/2024**

**Prosecution Witness : 5**

| | | | |
|---|---|---|---|
| **Name** | : பபியான் செபஸ்தியார் | **Caste** | : |
| **Father's Name** | : அருள் ஜோதிராஜா | **Calling** | : லோடு மேன் |
| **Village** | : முத்தழகு பட்டி | **Religion** | : |
| **Taluk** | : | **Age** | : 22 |
| | | **Dated** | : 23.06.2025 |

**23.06.2025**

இந்திய பிரமாண வகைமுறைச் சட்டம் 1969 (பிரிவு 4 ) – ன் படி சாட்சிக்கு சத்திய பிரமாணம் செய்யப்பட்டு பிரமாணத்தின் பேரில் சாட்சியின் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.

பட்டியல் சாட்சி– 5 திரு.**பபியான் செபஸ்தியார்** ஆஜர். பிரமாணம் போதிக்கப்பட்டு அ.சா. 5 ஆக முதல் விசாரணை செய்யப்பட்டார்.

**எதிரி ஆஜர்**

1. நான் திண்டுக்கல் **முத்தழகுபட்டி** குடியிருந்து **லோடு மேன்** வேலை செய்து வருகிறேன்.என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் உள்ள முதல் கையொப்பம் என்னுடையது தான். சின்னகாமலாப்புரம் பிரிவில் விபத்து நடந்த மறுநாளான 26.07.2023ம் தேதி காலை நான் அந்த இடத்தில் இருந்த போது போலிசார் வரைபடம் வரைந்து விசாரித்து கையொப்பம் வாங்கினார்கள்.(**பார்வை மகஜர் அதசாஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**)

போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

எதிரி தரப்பில் வாய்ப்பு வழங்கப்பட்டு குறுக்குவிசாரணை இல்லை.

taken down by me in open court read over to the Witness in the presence of the accused interpreted to him Tamil and admitted by him to be correct.

PACKIARAJ Digitally signed by PACKIARAJ Date: 2025.07.23 18:51:14 +0530

Judicial Magistrate No.I
Dindigul.